பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 19 (1- 4—68) திங்கள் ★ வெளியூர்: பங்குனி 20 (2- 4—68) செவ்வாய் [இதழ்: 241

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்குத் திருமணத் தடையா?

'இல்லை' என முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 30—

"ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாகப் பணியாற்றும் ஆடவரோ பெண்டிரோ, திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற தடை எதுவுமில்லை; திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளோடு தாய்மார்களாக இருக்கும் பல பெண் அதிகாரிகளைச் சான்றாகக் காட்டமுடியும்"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளிக்கையில் கூறினார்கள்.

'ஜமீன்தார் பாணி'யில் மத்திய அமைச்சர்!

நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர் கண்டனம்!

புதுடில்லி, ஏப். 1—

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் பத்து அம்சத் திட்டத்தைச் செயல்படுத்த உருப்படியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாதது குறித்து, நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் பொதுப் பேரவைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

நேற்றையக் கூட்டத்தில் பேசிய பத்துப் பேரும், அரசையும், கட்சியையும் குற்றஞ்சாட்டிக் கண்டனம் தெரிவித்தனர்.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினரான திரு. பி. கே. கோஷ் பேசுகையில்,

"ஒரு மத்திய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், 'ஜமீன்தார் பாணி'யில் நடந்துகொள்கிறார்"

எனக் குற்றஞ்சாட்டினார்.

"கொள்கை விவகாரங்களில் மக்கள் நலனுக்கு மாறாக நடந்துகொள்ளும் அதிகாரிகளின் அறிவுரையைக் கேட்டு நடந்துகொள்ளும் அந்த அமைச்சர் தமது போக்கைக் கைவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிவுரையைக் கேட்டுச் செயல்பட வேண்டும்"

என்று அவர் இடித்துரைத்திருக்கிறார்.

திரு. இம்மத் சின்கா என்பவர் பேசுகையில், பொது இன்சூரன்சு நிறுவனங்களையும், அனைத்து நாட்டு வாணிபத்தையும் அரசு மேற்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

திரு. ஆர். கே. சாட்டர்ஜி பேசுகையில், கட்சித் தலைவர்மீது நம்பிக்கைப் பிரச்சினை எழுந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

பிரிவினைக்குள் ஒரு பிரிவினை!

"தலைமறைவு நாகர்கள் நிறுவியிருக்கும் நாகாலாந்து அரசிலிருந்து, 'திக்கு' மாநிலம் என்ற தனிப் பகுதி கேட்கும் மற்றொரு பிரிவினை 'முயற்சி தோன்றியிருக்கிறது"

என, கௌகத்தி செய்தியொன்று தெரிவிக்கிறது.

அங்கமி — சேமா — ஆவோ போன்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கிக் கலக நாகர்கள், தலைமறைவு அரசாங்கம் நிறுவியுள்ளனர்; இதற்கென்று 'தலைமையமைச்சர்' ஒருவரும் இருக்கிறார்! தனி அஞ்சல் தலைகூட சில காலத்துக்குமுன் இந்த அரசினரால் வெளியிடப்பட்டது நினைவுகூரத்தக்கது!

நாட்டுப் பாதுகாப்புக்கு மக்கள் வழங்கிய காணிக்கை

ரூ. 17.75 கோடிக்கு ஆயுதங்கள் வாங்க முடிவு

புதுடில்லி, மார்ச் 31—

நாட்டுப் பாதுகாப்பு நிதியிலிருந்து, ஒரு 'ஸ்குவாட்ரனு'க்குச் சமமான போர் விமானங்களையும் ஒரு 'ரெஜிமெண்ட்'டிற்குச் சமமான டாங்கிகளையும், ஒரு போர்க் கப்பலையும் வாங்குவதற்கு ரூ. 17.75 கோடியைப் பயன்படுத்துவதென்று, நாட்டுப் பாதுகாப்புக் குழு தீர்மானித்திருக்கிறது.

1962-ல், செஞ்சீனத்தின் ஆக்கிரமிப்பின்போது இந்த நாட்டுப் பாதுகாப்பு நிதிக் குழு ஏற்படுத்தப்பட்டது; இந்த நிதிக்கு மக்களும், பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் நிதியளித்து உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி இறுதிவரையில் இந்நிதியில் ரூ. 80 62 கோடி சேர்ந்திருந்தது; 24.74 இலட்சம் தங்க நகைகளும், 15 66 இலட்சம் வெள்ளிச் சாமான்களும் இந்த நிதிக்குப் பொதுமக்களால் தரப்பட்டிருக்கிறது.

நீதி விசாரணை

பொதுமக்கள் விவரம் தெரிவிக்கலாம்

சென்னை, ஏப். 1—

சென்னையில் தொழிலாளர்—மாணவரிடை ஏற்பட்ட மோதல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம், மோதல்கள் நடைபெற்ற இடங்களான சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்வராய நாயக்கர் தொழிற்கல்வி நிலையம், சட்டக் கல்லூரி விடுதி ஆகியவற்றைப் பார்வையிடுவார்.

சம்பவங்கள் பற்றித் தங்களுக்குத் தெரிந்த தகவல்களைப் பொதுமக்கள், விசாரணையின்போது தெரிவிக்கலாம்.

மவுண்ட் ரோடு அரசினர் தோட்டத்தில் உள்ள பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இந்த விசாரணை நடைபெறும்.

இளம் மருத்துவர்கள் வேலைக்குத் திரும்பினர்

சென்னை, ஏப். 1—

சென்னை நகர அரசினர் மருத்துவ விடுதிகளில் பணியாற்றும் இளம் மருத்துவர்களும் (ஹவுஸ் சர்ஜன்கள்), துணை மருத்துவர்களும், (அசிஸ்டெண்ட் சர்ஜன்கள்) ஆகியோர், தங்கள் வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாகத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டனர்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சந்தித்துப் பேசியதன் விளைவாக அவர்கள், இந்த முடிவினை மேற்கொண்டனர்.

மருத்துவக் கல்லூரி மாணவப் பிரதிநிதிகளுடன், மீண்டும் அண்ணா அவர்கள் பேசுவார் என்று தெரிகிறது.

'கேரோ'வுக்கு கேரள மாநிலம் கொடுக்கும் விலை!

தொழில் முதலீடுகள் குறைகின்றன!

அண்மையில் குவாலியர் ரேயான் தொழிற்சாலையில் நடைபெற்ற 'கேரோ'வுக்குப் பிறகு, கேரள மாநிலத்தில் நிறுவப்படவிருந்த பல புதிய தொழிற்சாலைகள், வேறு மாநிலங்களுக்குச் செல்லும் எனத் தெரிகிறது.

'மாவூர்' அனுபவத்துக்குப் பிறகு, தங்கள் ரூ. 2 கோடி முதலீட்டினைக் கொண்ட மற்றொரு தொழிற்சாலையைக் கேரளத்தில் நிறுவப்போவதில்லை என, பிர்லா நிறுவனத்தினர் ஏற்கனவே முடிவு செய்திருக்கின்றனர்.

வேறு வெளிமாநிலத்தவர்களும், 'தங்கள் முதலீடுகளுக்குக் கேரளம் தகுதியில்லை' என்பதனை உணர்ந்து, மற்ற மாநிலங்களைத் தேடிவருவதாகத் தெரிகிறது!

கேரள அரசின் தொழில்துறை இலாகாவே வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி, இதுவரையில் 30-முதல் 40-வரை எண்ணிக்கையுள்ள தொழிலதிபர்கள் தங்கள் முயற்சியினைத் துண்டித்துக்கொண்டு, வேறு மாநிலம் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆடுகளும் இறக்குமதியாகின்றன!

இந்திய ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக அரசினர் வகுத்துள்ள திட்டமொன்றின்படி, முதல் தவணையாக அமெரிக்காவின் டெக்சாஸ் பகுதியிலிருந்து 700 ஆடுகள் புதுடில்லிக்கு வந்துள்ளன.

இம்மாத இறுதிக்குள் இதுபோல் மேலும் 1,460 ஆடுகள் இறக்குமதியாகும்.

வகுப்புக் கலவரங்கள்

முதலமைச்சர்களுக்கு புதுடில்லி தாக்கீது

'வகுப்புக் கலவரங்கள் சம்பந்தமாகப் பதிவு செய்யப்படும் எல்லா வழக்குகளையும் திறமையாகப் புலன் விசாரணை செய்து, குற்றம் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனை தருவதற்கு இயலக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுவது அவசியமாகும்"

என்று மத்திய உள்துறை அமைச்சர் சவான், மாநில முதலமைச்சர்களுக்கு அனுப்பியுள்ள மடலில் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லி: கூட்டாட்சியின் தலைநகரா? 'இந்தியின்' தலைநகரா?

பிரபல பத்திரிகையாளரும், நேரு போன்ற தலைவர்களிடம் தனிச் செல்வாக்குக் கொண்டவரும், காந்தியடிகளிடம் நெருங்கிப் பழகியவரும், 'இந்து' நாளிதழுக்குப் புதுடில்லி செய்தியாளராக இருந்திருப்பவரும், மத்திய அரசின் பல்வேறு விசாரணைக் குழுக்களில் இடம் பெற்றிருப்பவருமான திரு. பி. சிவராவ், 31—3—68 தேதியிட்ட 'இந்து' நாளிதழில்—'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியில்—எழுதியுள்ள கருத்துக்கள் வருமாறு:—

"லெப்டினென்ட்--கவர்னர் சார்பாக வெளியாகியுள்ள புதுடில்லி நகராட்சியின் அறிக்கை ஒன்றின்படி, இனி அந்த நகராட்சியின் நடவடிக்கைகள் முழுமையும், இந்தியில் மட்டுமே இருக்குமெனத் தெரிகிறது.

புதுடில்லி நகரம், 'இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் சமமாகச் சொந்தம்' என்ற அடிப்படை உண்மையை மறந்துவிட்ட செயலாகத்தான் இந்த நடவடிக்கை இருக்கிறது.

அமுலாக்கப்படுமானால், இது ஒரு பொருந்தி வராத கேடுபயக்கும் திட்டமாகத்தான் அமையும்!

'இந்தி தெரியாத ஊழியர்களுக்கு ஆறு மாத அவகாசம் தரப்படும்' என்பது, போலியான சலுகை!

அதிக ஆண்டுகள் ஊழியர்களாக இருந்துவரும் இந்தி பேசாத பகுதியினரின் எண்ணிக்கை, புதுடில்லி நகராட்சி அலுவலகத்தில் கணிசமான அளவுக்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல; இந்தி தெரிந்திருக்க அவசியமில்லாத வெளிநாட்டுத் தூதுவரகங்கள்—உலக அமைப்புகள் பல, புதுடில்லியில் இருக்கின்றன.

இந்த நிலையில், இந்தியாவின் கூட்டாட்சித் தலைநகராக உள்ள புதுடில்லியினை, இந்தி மொழி பேசுவோரின் ஏக போகத் தலைநகராக்கிக் கொள்வதற்கு புதுடில்லி நகராட்சியினருக்கு எவ்வித உரிமையும் இல்லை."

["இந்தியத் தலைநகரா—இந்தியின் தலைநகரா?" என்ற தலைப்பில், இதுபற்றி ஏற்கனவே 'நம் நாடு' இதழில் செய்தி வெளியாகியிருப்பதனையும், அதே கருத்தினையொட்டி, 'காதில் விழுந்தது' என்ற பகுதியில் விமர்சனம் ஒன்று வந்திருப்பதும் வாசகர்களுக்கு நினைவூட்டப்படுகிறது.]

'இருபதாண்டுகளாக அடிப்படைத் தேவையையும் நிறைவேற்றவில்லை'

பொருளாதாரத் திட்டங்களெல்லாம் தோல்வி

வி. வி. கிரியின் வேதனைக்குரல்

சிதம்பரம், ஏப். 1—

"நாம் சுதந்தரமடைந்து இருபதாண்டுகளாகியும், மக்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கிடைக்கவில்லை; இந்தத் தேவைகளை மக்கள் பெற்றாலன்றி, நாம் சுதந்தரம் பெற்றுவிட்டதாகக் கூறுவதில் பொருளில்லை"

என்று, இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்.

சிதம்பரம் அடுத்துள்ள கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு. வி. வி. கிரி பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பல திட்டங்களைத் தீட்டினோம்; ஆனால் அவை முழு அளவில் வெற்றி பெறவில்லை. இத்தோல்விக்குக் காரணம், திட்டங்களெல்லாம் கீழ்மட்டத்திலிருந்து போடப்படாமல், மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டத்துக்குப் போடப்பட்டதுதான்!

"எண்பது சதவிகித கிராமங்களைக்கொண்ட இந்த நாட்டில், உழவர்கள், நவீன முறைகளைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால்தான், நகரங்களின் முன்னேற்றம் காண முடியும்.

"கிராமவாசிகள் தங்கள் ஓய்வு நேரங்களில் பயன்தரும் சிறுகைத்தொழில்களை மேற்கொள்ள வேண்டும்."

நம் நாடு

ஆசிரியர் : இரா. செழியன் [illegible]

திருவள்ளுவராண்டு 1999 பங்குனி 19 (1—4—68) திங்கள்

காமராசர் கற்றுத் தெளியட்டும்!

சென்னை நகரத்தில் சென்ற கிழமை துவக்கத்தில் நடைபெற்றுள்ள வேதனை தரக்கூடிய விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், முன்னாள் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவராக இருந்த காமராசர் அவர்களுக்குப் புதிய தெம்பைக் கொடுத்திருக்கிறது. வேதனை தரக்கூடிய அந்நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு, காங்கிரசுக் கட்சிக்கு மறுபடியும் வலிவைத் தேடிக்கொள்ள அப்பெருந் தலைவர் முனைந்திருக்கின்றார்.

'கண்டனம் தெரிவியுங்கள்—கண்டனத் தீர்மானம் கொடுங்கள்—கழக ஆட்சிக்கு எதிராகப் போர்க் குரலெழுப்புங்கள்' என்றெல்லாம் காமராசர், கற்றவர்களையும்—கற்றுப் பட்டம் பெற்றவர்களையும் வருந்தி அழைத்திருக்கின்றார். ஆனால், அவர் விடுத்திருக்கின்ற அழைப்பு, அவர் எதிர்பார்ப்பதுபோல் காங்கிரசுக் கட்சிக்குப் புதிய வலிவைத் தேடித் தரப்போவதுமில்லை—குடிமக்களில் இரு சாராரிடை மூண்டுவிட்ட மனக் கசப்பை மாற்றி அமைத்திடத் துணைபுரியப் போவதுமில்லை!

எப்படியோ, 'கழக ஆட்சிக்கு எதிராக நமக்குள்ள எரிச்சலையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்திக் கொண்டுவிட்டோம்' என்ற அளவில், காமராசர் மனச்சாந்தியடையலாம்; ஆனால், தாம் பெறுகின்ற மனச்சாந்தி, 'நீடித்து நிலைத்திருக்கப் போவதில்லை' என்ற உண்மையை, விரைவில் அவர் உணர்ந்து கொள்ளுவார் என்பது உறுதி.

1965-ம் ஆண்டில் தமிழகம் முழுவதும் துப்பாக்கித் தர்பார் நடத்தி, சில பலரின் உயிரைப் பறித்துவிட்ட கரங்கள், 'காங்கிரசுக் கட்சியின் கொடுங்கரங்கள்தாம்' என்பதை, இப்பொழுது காமராசர் மறந்துவிட்டிருக்கலாம்; ஆனால், 'தமிழகம் அக்கொடுங்கோலாட்சியை இதற்குள்ளாக மறந்துவிடவில்லை' என்ற உண்மையை, அந்தப் பெருந்தலைவர் மறந்துவிட்டிருப்பதுதான் விந்தையிலும் விந்தையாகும்!

வேதனை தரும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைக் காட்டி, 'இழந்ததைப் பெற்றுவிடலாம்' என்ற நைப்பாசையால் காமராசர், தேம்பித் தேம்பி அழுகின்றார்—முகத்தில் அறைந்துகொண்டு முறையிடுகின்றார்—'அனைவரும் வாரீர்—நியாயம் கேட்டிட' என வருந்தி அழைக்கின்றார்—என்ற உண்மையை, தமிழகம் தெளிவாக அறிந்தே இருக்கிறது. 'எதிர்க் கட்சித் தலைவர்' என்ற நிலையிலிருந்து, 'கிடைத்த வாய்ப்பை அவர் பயன்படுத்த முனைந்துள்ளார்' என்ற அளவில், நாம் அவர் கூற்றைக் கண்டு வியப்படையவில்லை; மாறாக, 'எதிர்க் கட்சித் தலைவர்' என்ற முறையில் 'தம்மால் முடிந்த திருப்பணியை அவர் செய்யத் துணிந்துள்ளார்' என்றே நாம் தீர்மானிக்கின்றோம். அவர் போக்கை, சந்திக்க வேண்டிய முறையில் சந்திக்கவும் நாம் தயாராக உள்ளோம்.

ஆனால், நடைபெற்றிருக்கின்ற வருந்தத்தக்க நிகழ்ச்சிகளுக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத எதையோ ஒன்றைக் கூறி, அதை வைத்துக்கொண்டு கழக ஆட்சியைக் கறைபடுத்தவும், அதே நேரத்தில் காங்கிரசுக் கட்சிக்குச் சிறப்புத் தேடிக்கொள்ளவும் காமராசர் முன்வந்திருப்பதை, நம்மால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. அவர் ஆற்றியிருக்கின்ற பொருந்தாப் பொய்யுரையை வெளிப்படுத்தாமலிருப்பதற்குமில்லை.

ஜெயங்கொண்டான் என்ற ஊரில் காங்கிரசு மாநாடு நடைபெற்றதாம். அங்கிருந்த தேநீர்க் கடைக்குத் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் செருப்பை அணிந்துகொண்டு போனாராம்; அந்தத் தாழ்த்தப்பட்டவரைப் பார்த்து அந்தத் தேநீர்க் கடைக்காரர்,

> "இப்படிச் செருப்புப் போட்டு வரக்கூடாது; உங்கள் (அரிசன) ஆட்சி போச்சு; இப்போது வேறு ஆட்சி நடக்கிறது; ஆகவே இப்படி வராதே"

என்று கூறப்பட்டு, அந்தத் தாழ்த்தப்பட்டவர் தடுக்கப்பட்டாராம்! இத்தகவலை காமராசர் கூறிவிட்டு, மேலும் தொடர்ந்து தமது கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கின்றார் :—

> "மக்கள் மனத்தில் இப்படி ஓர் எண்ணம் வளர்ந்துவிட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் ஆட்சி போய்விட்டது. அவர்களை அடக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் வந்தது? அப்படிப்பட்ட எண்ணத்தை உண்டாக்கிவிட்டு விட்டார்கள்."

இன்றையக் கழக ஆட்சியின் மீது காமராசர், திட்டமிட்டு ஏற்றியுள்ள பழிச்சொல் இதுதான்!

ஏற்கனவே தமிழகத்தில் இருந்த காங்கிரசு ஆட்சியை, 'பழங்குடி மக்கள் ஆட்சி' எனத் தமிழக மக்கள் தீர்மானித்துக்கொண்டிருந்ததாகவும், அதே மக்கள் இன்றையக் கழக ஆட்சியை 'பழங்குடி மக்களுக்குக் கேடு பயக்கும் ஆட்சி' என முடிவு கட்டிக் கொண்டிருப்பதாகவும் — நடைபெற்றதோ இல்லையோ — ஒரு தேநீர்க் கடை நிகழ்ச்சியைச் சான்றாகக்கொண்டு—இன்றையக் கழக ஆட்சியைச் சாடியிருக்கின்றார் காமராசர்,

காமராசர் குறிப்பிட்டிருக்கின்ற நிகழ்ச்சி உண்மையாக இருந்திடும்பட்சத்தில், சட்டப்படி அதற்குப் பரிகாரம் தேடவும், இனி அத்தகைய நிகழ்ச்சி நடைபெறுமலிருந்திடப் பார்த்துக் கொள்ளவும் கழக ஆட்சி தயாராக உள்ளது. 'பழங்குடி மக்களின் உயிர்த் தோழன் கழகம்' என்பது, உலகறிந்த உண்மை.

'பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது காங்கிரசு ஆட்சியேயாகும்' எனப் பீத்திக்கொள்ளும் காமராசர் அவர்களுக்கு, காங்கிரசு ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஆந்திர மாநிலத்தில் பழங்குடி பிறந்த இருவருக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற கொடுமையைக் காணிக்கையாக்குகின்றோம்.

தேநீர்க் கடையில் நடைபெற்றதாகத் தம்மால் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, கழக ஆட்சியையே, 'பழங்குடி மக்களுக்கு எதிரி' என, காமராசர் முடிவுகட்டிக் கூறியிருப்பதுபோல், ஆந்திர மாநிலத்தில் நிகழ்ந்துள்ள இரண்டு நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு அங்குள்ள காங்கிரசு ஆட்சியை, 'பழங்குடி மக்களின் எதிரி' எனக் குற்றஞ்சாட்ட நாம் விரும்பவில்லை. காமராசருக்கு இருப்பது போன்ற விரிந்த அரசியல் அறிவு நமக்கு இருந்திடவில்லை என்ற காரணத்தால், அவர் முறையைப் பின்பற்றுவதை நாம் விரும்பவில்லை; அம்முறையை நாம் வெறுக்கவும் வெறுக்கின்றோம்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சஞ்சிச்சேரலா கிராமத்தில், பிப். 24-ம் நாள், பழங்குடியைச் சேர்ந்த ஒரு சிறுவன், உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டிருக்கின்றான்.

மற்றொரு ஆந்திர கிராமத்தில், பழங்குடியைச் சேர்ந்த சில பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு தெருக்களில் நடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர்!

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும், மக்களவையில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியுள்ளன.

காங்கிரசு ஆட்சியில்தான், அரிசனப் பெண்களின் மானம் பறிக்கப்பட்டிருக்கிறது!

அதே ஆட்சியில்தான், அரிசனச் சிறுவன் உயிருடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றான்!

'செருப்பு அணியக்கூடாது' என எவனோ ஒரு தேநீர்க் கடை வெறியன் கூறியதாகக் கூறி, கழக ஆட்சியைப் பழித்திருக்கின்ற காமராசர், காங்கிரசு ஆட்சியில் நடைபெற்றிருக்கின்ற இரண்டு கொடுஞ் செயல்களுக்கும் என்ன விளக்கம் தரப்போகின்றார்? 'இழந்ததைப் பெற இதுவல்ல வழி' என்பதைக் காமராசர் தெளிவாகத் தெரிந்துகொள்ளட்டும்!

—கா. க.

'நாடு அடைந்த வேதனையை நாங்களும் அனுபவித்தோம்'

'நீதி விசாரணை மூலம் நடைபெற்றவை அனைத்தையும் அறிந்த பின் நடவடிக்கைகள் எடுக்கத் தயங்கோம்'

சென்னை, மார்ச் 30—

"நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடைபெறவிருக்கிறது; அதற்குக் 'குந்தகம் ஏற்படுமோ' என்ற அச்சத்தினால், எல்லாவற்றுக்கும் என்னால் விவரமாகப் பதில் சொல்ல இயலவில்லை. 'போலீசுத் தரப்பில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரத்தில்—எடுக்கவேண்டிய முறையில் எடுத்தார்களா' என்பதெல்லாம் விசாரணையின் முடிவில் தெரியவரும்போது, கடமையைச் செய்யத் தவறியவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு, தயக்கமின்றி எடுக்கும்.

"நீதி விசாரணையில் போலீசுத்துறைமீது குறைகூறப்பட்டால், பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பதற்கு நான் தயக்கமோ, கூச்சமோபடமாட்டேன்; காரணம், 'நாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள் என்பதால் ஆட்சிக்கு வந்தோம்' என்பதல்ல; 'அனைவருக்கும் வேண்டியவர்கள்' என்ற முறையிலேயே ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ளோம்; தவறு செய்தால் மன்னிப்புக் கேட்பதற்கு, தகுந்த முன்மாதிரிகள்கூட இருக்கின்றன.

"நீதி விசாரணை மூலம், நடைபெற்ற நிகழ்ச்சியின் முழு விவரத்தையும் அறிய நான் ஆவலாக இருக்கிறேன். அரசு அறிந்துகொள்ள வேண்டியவைகள் பல, அதில் இருக்கின்றன; எனவே, நீதி விசாரணை நடைபெறுவதில் எவ்விதத் தாமதமும் ஏற்படாது; நீதி விசாரணை நல்லமுறையில் நடைபெறுவதற்கு எதிர்க் கட்சியினர், எல்லாவிதச் சான்றுகளையும் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

'நீதி விசாரணைக்குப் பின், அதில் தெரியவரும் விவரங்களின் அடிப்படையில், எங்களை நீங்கள் 'எப்படி நடக்கவேண்டும்' என்று பணிக்கிறீர்களோ, அப்படி நடப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதுவரையில், உணர்ச்சிவயப்படாமல் ஒத்துழைக்குமாறு எல்லாக் கட்சியினரையும் கேட்டுக் கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், நிதி ஒதுக்கீடு மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெள்ளத் தெளிவுற விளக்கினார்; மேலும் [illegible]வர்கள் தாக்கப்பட்டபோது போலீசுப் பாதுகாப்புக் கொடுக்க அரசு தவறிவிட்டது' என்றெ[illegible]றப்பட்டதற்குப் பதிலளிக்கும் வகையில் குறிப்பிட்டதாவது :—

"எந்த ஓர் அரசும், போலீசுத் துறையிடம், 'நீங்கள் எதுவும் செய்யவேண்டாம்; கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருங்கள்' என்று சொல்லாது; இந்த அரசும், அப்படி எதுவும் சொல்லவில்லை. 'எந்தச் சூழ்நிலையிலும், திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் கூடாது; தீரச் சமாளிக்க இயலாத நிலைமை ஏற்பட்டால் அல்லாமல், அதுபோன்ற நிலைமை கூடாது' என்பதுதான், போலீசுத் துறைக்கு இந்த அரசு சொல்லியிருப்பதெல்லாம்! இது தவிர, மற்றபடி முழு அதிகாரமும் அவர்களுக்கு இருந்தது.

"மாணவர்கள் மீது எங்களுக்கு எந்த வகையில் விரோதம் வரக் காரணம் இருக்கிறது? மாணவர்களிடம் நாங்கள் கொண்டுள்ள அன்பை மாற்றிக்கொள்வதற்கோ அல்லது கெடுவதற்கோ எந்தவித முகாந்தரமும் இல்லை; அந்த விதமான மனப்பான்மையுடன் நடக்கக்கூடியவர்கள் அல்லர் நாங்கள் என்பதையும் அனைவரும் அறிவர்; நாடு அடைந்த வேதனையை நாங்களும் அடைந்த காரணத்தால், நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க இந்த அரசு சிறிதும் தயங்காது; பொருட்களை இழந்தவர்களுக்குத் தக்க ஈடு தரப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்."

---முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்ற மேலவையில்)

வருகிற ஆண்டில் ஆறு புதிய கல்லூரிகள்

நிபந்தனையை நிறைவேற்றித் தரும் இடங்களுக்கு வாய்ப்பு

கல்வியமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 28—

"1968–69-ஆம் ஆண்டில் ஆறு கலைக் கல்லூரிகளைத் துவக்க அரசு எண்ணியுள்ளது; ஆனால் எங்கெந்த இடங்களில் துவக்குவது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை; கல்லூரி துவக்குவதற்குரிய நிபந்தனைகளை யார் யார் நிறைவேற்றுகிறார்களோ—அவர்களில் முதலில் நிறைவேற்றியவர்களுக்கு—புதிய கல்லூரிகளைத் துவக்க அனுமதியளிக்கப்படும்"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் பெ. மலைச்சாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

"கடந்த அக்டோபர் திங்களிலேயே இந்த ஆறு கல்லூரிகளுக்கான அனுமதி பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் கேட்டுப் பெறப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இடம் தேர்ந்தெடுப்பதுதான் இன்னும் முடிவாகவில்லை"

என்றும் கல்வியமைச்சர் விளக்கிக் கூறினார்.

மேலும் துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டுக் கூறியதாவது :—

"வ. ஆ. மாவட்டம் வாலாஜா பேட்டையில் ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"உசிலம்பட்டியில் ஓர் கல்லூரி ஏற்படுத்துவது குறித்து திரு. மூக்கையா தேவர் முயற்சி எடுத்து நன்கொடைகள் திரட்டினால் அதற்கான ஒத்துழைப்புத் தருவதாக நான் அவரிடம் ஒப்புதல் அளித்திருக்கிறேன்."

அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளித்ததாவது :—

"நாகூரில் ஆண்டவர் கல்லூரி அமைப்பது பற்றிய விண்ணப்பம் வந்து சேரவில்லை. அங்கே தனிப்பட்டவர்களால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதா — ஆண்டவர் அறநிலையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற விவரமில்லை. நிபந்தனைகளை நிறைவேற்ற அங்குள்ளவர்கள் தயாராயிருந்தால், ஆவனசெய்யப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

இரு மொழித் திட்டத்தால் இந்தி பேசுவோருக்குப் பாதகமில்லை

அவர்கள் தாய் மொழியிலும் கல்வி அளிக்கப்படுகிறது

தெலுங்கு-கன்னட மொழிகள் கற்பதற்கும் வசதி--அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 28—

" 'இந்தியே படிக்கக்கூடாது' என்று இந்த அரசு எவ்வித உத்தரவும் போடவில்லை; இப்பொழுதுகூட, சென்னையில் உள்ள இரண்டு உயர் நிலைப் பள்ளிகளில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு இந்தியில் கல்வியளிக்கப்படுகிறது "

என்று கல்வியமைச்சர் இரா நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் கே. விநாயகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளைக் கற்க வேண்டும் என்று பதினைந்துக்கு மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால், அவர்களுக்கு அதற்கான வசதி அளிக்கப்படுகிறது. இப்போது கோவை மாவட்டத்தில் சில பள்ளிகளில் மலையாளம் கற்பிக்[illegible]றது; அதே போல், [illegible] மொழி வழங்கும் இ[illegible]ல் தெலுங்கும் கற்பிக்கப்படுகிறது"

என்று அமைச்சர், மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். அமைச்சர் மேலும் பதிலளித்ததாவது:—

"இந்தி ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஏற்கனவே வாங்கிவந்த ஊதியம் பாதிக்கப்படாதவகையிலும், ஊதிய நிலை (சர்வீசு) பாதிக்கப்படாதவகையிலும் மாற்றுவேலை தேடித் தரத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இப்போதும் வேறு வேலைகளைச் செய்துகொண்டுதானிருக்கிறார்கள்—சும்மா இல்லை; 'சும்மா இருக்கிறார்களே' என்பதற்காக வேலைநீக்கம் செய்வதற்கில்லை."

அசாம் கலவரங்கள்-- துப்பறியும் துறையின் தோல்வியே

உள்துறை அமைச்சர் ஒப்புதல்

"கடந்த குடியரசு நாளன்று அசாம் மாநிலத்தில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் துப்பறியும் துறையின் தோல்வியே"

என்பதனை, மக்களவையில், உள்துறை அமைச்சர் சவாண் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

" 'குடியரசு நாளன்று வன்முறைகள் நிகழும்' எனத் துப்பறியும் துறையினர் முன்கூட்டியே தெரிந்துகொண்டிருந்தால், தடுப்பு — பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்திருக்க முடியும். அவ்வாறு அந்த இலாகா செய்யாதது ஒருவகையில் தோல்வியைத்தான் காட்டுகிறது"

என அவர் மேலும் விளக்கமளித்திருக்கிறார்.

குழு அமைக்கும் அவசியம் தற்போது இல்லை!

சென்னை, மார்ச் 29—

"கோயில் நிர்வாக ஊழல்பற்றி விசாரிக்கத் தனிக் குழு ஒன்றை அமைக்கவேண்டிய அவசியம் தற்போது இல்லை; கோயில் நிர்வாகம்பற்றிய துறையினால் அதனைத் தடுக்க முடியாதபோது அதுபற்றி ஆராயலாம்"

என்று, சட்டமன்ற மேலவையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

உங்டாட்:

சில புள்ளிவிவரங்கள்

'கூடியது—கலைந்தது' என்று அதன் தோல்வி பற்றிச் சுருக்கமாகக் கூறப்படும் 'உங்டாட்' மாநாடு, கடந்த வெள்ளியன்று இரவு 9-30 மணியளவில் முடிந்தது.

ஐ. நா.-வின் சார்பாகப் புதுடில்லியில் நடந்த வர்த்தக வளர்ச்சி பற்றிய இந்த மாநாடு, மொத்தம் 58 நாட்கள் நடைபெற்றிருக்கின்றன!

இந்த மாநாட்டினை நடத்தி முடிப்பதற்கு ஐ. நா.-வுக்கு ஆகியுள்ள செலவு, 20,00,000 டாலர்கள் ஆகும்.

21 நாடுகள்—44 பல்வேறு அமைப்புகள் ஆகியனவற்றிலிருந்து வந்த 1,600 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

இத்தொடர் கூட்டத்தில் 464 அதிகார முறைப் பேச்சுவார்த்தைகளும், 51 அதிகாரச் சார்பற்ற முறை சந்திப்புகளும் நடைபெற்றிருக்கின்றன!

இந்த மாநாடு, மொத்தம் 5,159 அறிக்கைகளை வெளியிட்டுள்ளது; அவைகளின் மொத்த பக்கங்கள் 42,517.

மாநாட்டுக்கான அலுவல்களில் ஈடுபட்டவர்களில் 560 பேர், ஐ. நா.-வைச் சேர்ந்தவர்கள்! 500 பேர், இந்தியாவைச் சேர்ந்தவர்கள்!

இதையல்லாமல், இந்தியாவைச் சேர்ந்த சுமார் 1,000 பேர் தந்தி, பொதுப்பணி போன்ற துறைகளில் பணியாற்றினர்!

மாநாட்டு நிகழ்ச்சிகளைச் செய்திகள் மூலம் வெளி உலகுக்கு அறிவித்தவர்கள்—183 இந்திய நிருபர்கள், 147 வெளிநாட்டு நிருபர்கள் ஆவர்!

நத்தத்தில் சீரணிப் பணி

கால்வாய் தூர் வாரினர்

"நத்தம் ஊராட்சி ஒன்றிய லிங்கவாடி கிராமம் அக்பர்குளப் பாசனக் கால்வாய், மார்ச் 18, 19 ஆகிய இரு நாட்களிலும் இவ்வட்டார சீரணிப் படையினரால், ஊராட்சித் தலைவர் எம். இருளாண்டி கவுண்டர் தலைமையிலும் கிராம மக்களின் ஒத்துழைப்புமூலமும் தூர் எடுக்கப்பட்டது.

கால்வாயில் மண், மணல் மற்றும் புதர்களை நீக்கிக் குளத்திற்குத் தண்ணீர் தங்கு தடையின்றி செல்லும் அளவிற்குக் கால்வாயின் ஒரு பக்கத்தில் கரையை உயர்த்தி, கரையில் ஏற்பட்டிருந்த சுமார் 32 அடி நீளம்—40 அடி அகலம்—7 அடி உயரமுள்ள உடைப்பு முழுவதும் அடைக்கப்பட்டது வேலையின் மொத்த மதிப்பு ரூ 800.

ஊராட்சித் தலைவர் -- துணைத் தலைவர்கள்

பயிற்சி முகாம்

22—3—68 அன்று திருவரங்குளத்தில் ஊராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் பயிற்சி முகாமை, வல்லத்திராகோட்டை ஊராட்சித் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் யு குசைநாதன் பி.ஏ. துவக்கிவைத்தார்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம், அனைவரையும் வரவேற்று பயிற்சி முகாமின் அவசியத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

புதுக்கோட்டை கோட்டப் பஞ்சாயத்து அலுவலர் பிரான்சிஸ், துணைக் கோட்ட பஞ்சாயத்து அலுவலர் ப. நடராசன் ஆகியோர், ஊராட்சிமன்றத் தலைவர்களின் பொறுப்புக்கள் பற்றியும், கடமைகள்பற்றியும், ஊராட்சிமன்றங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

அண்ணாவுக்கு சிறப்பானவரவேற்பு

பம்பாய் தி.மு.க. ஏற்பாடு

"வரலாற்றுச் சிறப்புமிகு அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்கள், 15—4—68 மாலை 4-50 மணிக்கு விமானமூலம் பம்பாய் சாந்தா குரூஸ் வந்து சேருகிறார்கள்; அன்று இரவு 12 மணியளவில் வேறு விமானத்தில் பம்பாயிலிருந்து ரோம் வழியாக அமெரிக்காவுக்குப் பயணமாகிறார்கள்.

"பம்பாயில் அவர் தங்கியிருக்கும் நகரத்தில், பம்பாய் தி மு. கழகச் சார்பில் வரவேற்பு — வழியனுப்பு விழா மிகச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

"தமிழக அரசுப் பொறுப்பை ஏற்றபின், முதன்முறையாக பம்பாய்க்கு வருகை தரவிருக்கும் அண்ணா அவர்களுக்கு வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவுக்கு அமையச் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள முடிவு எடுக்கப்படவிருக்கிறது"

என்று, பம்பாய் தி.மு.க. தலைமைச் செயற்குழுச் சார்பில் தோழர் தோ. து. அன்புச்செழியன் அறிவிக்கிறார்.

மத்திய அரசின் வரிவிதிப்புக்குக் கண்டனம்

வரவு---செலவுத் திட்ட நகலை எரிக்க மூன்றுகட்சிகள் முடிவு

21—3—68-ல் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது; கீழ்க்கண்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்; கே. ஆர். நல்லசிவம் எம்.எல்.ஏ., எஸ். பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ.—சம்யுக்த சோஷலிஸ்ட்டுக் கட்சி; எம். ஆர் வெங்கட்ராமன், வி. பி. சிந்தன்—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக் கட்சி; எம். கல்யாணசுந்தரம், ஏ. கே. சுப்பையா எம்.எல்.ஏ.—இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி.

தீர்மானம்

மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ள மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள தபால்-இரயில் கட்டண உயர்வுகளையும், புதிய வரிகளையும் கண்டிக்கும் முறையில் 3—4—68-ல் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் வரவு-செலவுத்திட்டப் பிரதிகளைத் தீயிட்டுக் கொளுத்துவது என்றும், 5—4—68 காலையில் எல்லா மாவட்டத் தாலுகா தலைநகர்களிலும் அஞ்சல் நிலையங்கள் முன்பு மறியல் செய்யவேண்டுமென்றும், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி, மார்க்சிஸ்டுக் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய கட்சிகள் கேட்டுக்கொள்கின்றன.

"இந்தக் கண்டன நிகழ்ச்சிகள் முற்றிலும் அமைதியான முறையில் நடத்துவதற்குப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து ஒத்துழைப்புத் தரவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

"மற்றக் கட்சிகளும், தொழிற் சங்கங்களும், இந்த இரண்டு கண்டன நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவு தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது" என்று, திரு. எம். கல்யாணசுந்தரம் தெரிவிக்கிறார்.

சந்தா இனத்தில் ரூ. 10-கோடி பாக்கியாம்

புதுடில்லி, மார்ச் 29—

"இந்தியா முழுவதிலும் டெலிபோன் சந்தா இனத்தில் பாக்கியாக நிற்கும் தொகை ரூ. 10 கோடியாகும்"

என்று, மக்களவையில், செய்தித் தொடர்பு அமைச்சர் ராம் சுபாக் சிங் தெரிவித்திருக்கிறார்.

திருவரங்குளத்தில் சீரணிப் பணி

பூமத்தான்பட்டியில்:

24—3—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பூமத்தான்பட்டி கிராமத்தில் குடிகாட்டு புதுக்குளத்திற்குச் செல்லும் வரத்துவாரியை சீர்செய்யும் சீரணிப் பணியை திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் துவக்கிவைத்தார். 100 சீரணித் தொண்டர்களும், கிராம மக்களும் முழுமூச்சுடன் வேலையில் ஈடுபட்டனர். புதுக்கோட்டை பகுதி சீரணியினரும் வேலையில் பங்குகொண்டனர்.

வெள்ளாகுளத்தில்:

24—3—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெள்ளாகுளம் கிராமத்தில் அம்புலியாற்றிலிருந்து வெள்ளாகுளத்திற்குச் செல்லும் வரத்துவாரியை சீர்செய்யும் சீரணிப் பணித் துவக்க விழாவிற்குத் தஞ்சை மாவட்ட கொத்தமங்கலம் ஊராட்சிமன்றத் தலைவர் சின்னையா தலைமை வகிக்க—திருவரங்குளம் ஆணையர் பெ. வேலாயுதம் சீரணியின் சீரியப் பணிகள் பற்றியும், அதனுள் அடங்கிய தத்துவங்கள் பற்றியும், கிராம மக்களின் கடமைகளைப் பற்றியும், இன்றைய தமிழக அரசு கிராம மக்களுக்குச் செய்துவரும் திட்டங்களைப் பற்றியும் தெளிவாகவும் விரிவாகவும் கூறி, வேலையைத் துவக்கி வைத்தார்.

நான்கு பர்லாங் நீளமுள்ள இவ்வரத்துவாரி சீர்செய்யும் சீரணிப் பணியில் 100 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டனர். கிராம மக்கள் சீரணியினருக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார்கள்.

தேத்தாம்பட்டியில்:

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேப்பங்குடி ஊராட்சிமன்றத்திலுள்ள தேத்தாம்பட்டி கிராம வடவாகுளம் வரத்துவாரி சீர்செய்யும் சீரணிப் பணி 25—3—68 அன்று நடைபெற்றது.

திருவரங்குளம் வட்டார சீரணித் தலைவர் அ. பெரியண்ணன் தலைமையில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் துவக்கிவைத்து சீரணியின் நோக்கத்தையும், கிராம மக்களின் கடமைகளைப் பற்றியும் எடுத்துரைத்தார். வரத்துவாரி சீர்செய்யும் சீரணிப் பணியில் 100 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

புதுக்குப்பத்தில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

அமைச்சர் மாதவன் அடிக்கல் நாட்டினார்

கல்விப் பணிக்கு 70 வயது மூதாட்டி நன்கொடை

தென்னாற்காடு மாவட்டம் வானூர் தொகுதியில் உள்ள புதுக்குப்பம் என்ற கிராமத்தில், 24—3—68 அன்று உயர்நிலைப் பள்ளிக்கான கல்நாட்டு விழா நடந்தது.

விழாவுக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஜி. பாலகிருஷ்ணன் தலைமைதாங்கினார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் செ. மாதவன் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் கலந்துகொண்ட 70 வயதுடைய தையநாயகி என்ற மூதாட்டியார், பள்ளிக் கட்டிட நிதிக்காக அமைச்சரிடத்தில் ரூ. 500 நன்கொடையாக அளித்தார்; இன்னும் சிலரும் நன்கொடை அளித்தனர்.

விழாவில் ஈரோடு சின்னசாமி எம்.எல்.ஏ., மேல்மலையனூர் ஆர். கே. முனுசாமி எம்.எல்.ஏ., வழக்கறிஞர் டி. ஏ. எஸ். பாலன், திண்டிவனம் நகரச் செயலாளர் எஸ். பக்கிரி ஆகியோர் பங்கேற்றனர்.

உப்புவேலூர் கூட்டுறவுப் பால் சங்கத்தின் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

காங்கிரசுக்காரர்கள் பதுக்கி வைத்துள்ள பணத்தைத் தந்தால்...!

புதுடில்லி, மார்ச் 30—

"காங்கிரசுக்காரர்களும் அவரது குடும்பத்தினரும், கடந்த 20 ஆண்டுகளில் பதுக்கிவைத்துள்ள பணத்தை மத்திய அரசிடம் ஒப்படைத்துவிட்டால், வெளிநாடுகளிடம் நாம் வாங்கியுள்ள கடன்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விடலாம்! நாட்டுக் கடனையும் குறைத்து விடலாம்! மூன்று பொகாரோ ஆலைகளுடன், நான்காவது ஐந்தாண்டுத் திட்டமொன்றையும் துவக்கிவிடலாம்!

--பிலூ மோடி

(நாடாளுமன்றத்தில்)

கழக ஆட்சியில் விவசாயிகள் பெறும் நம்பிக்கை

கிராமந்தோறும் விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் அமைப்பு

உடுமலை வட்ட திராவிட விவசாயிகள் முன்னேற்றச் சங்கச் செயற்குழுக் கூட்டம், 2—3—68 மாலை 3-மணியளவில் அவைத் தலைவர் திரு. நடராசு தலைமையில் நடைபெற்றது.

செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, வட்டத் துணைச் செயலாளர் மா. சேரன் தலைமையில் வாளவாடி இராசகோபால், கொடிங்கியம் இரங்கசாமி, தும்பலப்பட்டி கந்தசாமி ஆகியோர் செப். 16, 17 ஆகிய நாட்களில் உடுமலை வட்டத்தில் தீவிரச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு—வாளவாடி, கொடிங்கியம், தும்பலப்பட்டி, சுண்டக்காம்பாளையம், தளி, பள்ளபாளையம், குமாரபாளையம், ஆண்டியகவுண்டனூர் ஆகிய ஊர்களில் கிளைகள் துவக்கியுள்ளனர்.

ஆங்காங்கே உள்ள விவசாயிகள் உற்சாகத்தோடு வருகை தந்து கிளைகளைத் துவக்கப் பேருதவி புரிந்தனர்.

தோழர் மா. சேரன் தலைமையில் சென்ற குழு, ஒவ்வொரு அமைப்புக் கூட்டத்திலும் விவசாயிகளின் குறைகளைத் தமிழக அரசு கவனிப்பதோடு, விவசாயிகளுக்கு எல்லா ஒத்துழைப்புகளையும் நல்கும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

குடந்தையில் கண்டனக் கூட்டம்

10—3—68 மாலை 7-மணிக்கு கும்பகோணம் மடத்துத் தெருவில் திரு. எஸ். சம்பந்தம் தலைமையில், நகராட்சி சந்தைகள் ஏலம் விடுவதை எதிர்த்தும், அகாரணமாக வாடகைக் கட்டணங்களை உயர்த்துவதைக் கண்டித்தும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஆர். கே. அமிர்தலிங்கம், ஆர். ஜி. பசுபதி, உ. முத்தையா, கே. பெரியசாமி, கே. கே. எஸ். வாசன், முகம்மது இப்ராகிம், வி. குருசாமி, எஸ். எஸ். வீரய்யன், ஆர். கன்னையன், எம். பழனிசாமி, எஸ். ஆர். ராதா, பி. வி. ஜெபராமன், ப. கோதண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பாண்டியராசபுரம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கம்

மதுரை மாவட்டம் பாண்டியராசபுரம் சர்க்கரை ஆலையின் 'மெஜரா சுகர் ஸ்டாப்' யூனியனுக்குக் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக 1968-ம் ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—

தலைவர்:—எஸ். அக்கினிராசு பி.ஏ., எம்.எல்.ஏ.; துணைத் தலைவர்: ஏ. மூக்கன்; செயலாளர்: ஏ. கே. சிவசாமி; துணைச் செயலாளர்: ஆர். எஸ். கிருஷ்ணன்; பொருளாளர்: வெங்கடாசலம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

2--4--68

மணக்காடு

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு ஊராட்சி மன்றத்திற்கு அருகில்; தலைவர்: வை. சுப்பிரமணியன்; பேசுவோர்: க. காளிமுத்து பி.ஏ., சு. தென்கோவன், ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., ப முருகு எம்.ஏ., இரா. சங்கரன், ச. குமரவேல், க. சிதம்பரன், மற்றும் பலர்.

3--4--68

பி. பாப்பாரப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு புதிய சுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபத்தில்; தலைவர் : கே. பி. தனபால்; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., பி. எஸ். முருகேசன், என். ஆறுமுகம், ப. செ. சஞ்சீவி, ஜி. சின்னசாமி, டி.கே.கோபால், ஜி. எல். மாரியப்பன், டி. எஸ். அருணசலம், அன்புக்கரசு, கிருஷ்ணன், நடேசன், கோன்றி, ஜெயவேல், முனியப்பன், சந்தியான், பி. மாரியப்பன்.

தேனி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு பங்களாமேடு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர் : கே. வி. வேல்சாமி ; பேசுவோர் : திருவை அண்ணமலை, கே. எஸ். பாண்டியன்.

பாபநாசம் வட்டத்தில்

செய்தித் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

ஏப்ரல் 2 மாலை 4-மணி : மெலட்டூர்—ஊராட்சிமன்றம் வரவேற்பு; 5-மணி : கிளியூர்—ஊராட்சி வரவேற்பு விழா ; தீண்டாமை ஒழிப்பு பரிசளிப்பு விழா ; 7-மணி : இரும்புத்தலை—பொதுக்கூட்டம்.

ஏப்ரல் 3 மாலை 4-மணி : அம்மாப்பேட்டை—பேரூராட்சி வரவேற்பு; 6-மணி : நீடாமங்கலம்—பேரூராட்சி வரவேற்பு; 7-மணி : பொதுக்கூட்டம்.

எல்லா நிகழ்ச்சிகளிலும், ந சோமசுந்தரம் எல்.எல்.ஏ., வட்டச் செயலாளர் ந. சாமிநாதன் கலந்து கொள்வர்.

புதிய இரண்டு ரூபாய் நோட்டு

பம்பாய், ஏப் 1—

" தற்போதைய ரிசர்வ் பாங்கியின் கவர்னர் எல். கே. ஜா கையெழுத்துடனுள்ள புதிய இரண்டு ரூபாய் நோட்டுகள், விரைவில் புழக்கத்திற்கு விடப்படும் "

என்று அதிகாரப்பூர்வமான செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

கையெழுத்தில் மாறுதலைத்தவிர, புதிய நோட்டுகள், மற்ற அம்சங்களில் தற்போதுள்ள நோட்டுகளைப்போலவே இருக்கும்.

அசோகச் சின்னமும், பி. சி. பட்டாச்சாரியா அல்லது அதற்குமுன் கவர்னராக இருந்தவர்களின் கையெழுத்தும் உள்ள நோட்டுகள், தொடர்ந்து செல்லுபடியாகும்.

மெட்டல் பாக்ஸ் தொழிலாளர்கள்

வேலைக்குத் திரும்பினர்

சென்னை, ஏப் 1—

கடந்த பிப்ரவரி 6-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்து வந்த திருவொற்றியூரிலுள்ள மெட்டல்—பாக்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்று வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

விநாயகம்-எம். ஜி. ஆர். சம்பந்திகள் !

'சிறுத்தை தம்பதிகள்' பற்றி சுவையான கேள்வி---பதில்

சென்னை, மார்ச் 30—

சென்னையில் 1967ல் வனவிலங்குகள் வாரத்தையொட்டி நடந்த விலங்குகள் ஊர்வலம்பற்றி, சட்டமன்றத்தில், காங்கிரசுக் கொறடா திரு. கே. விநாயகம் கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர்கள் அளித்த பதில்களும் அவையினருக்கு நகைச்சுவையை அளித்தன.

கே. விநாயகம் :—" மிருகக்காட்சிசாலைக்கு நான் ஒரு சிறுத்தையை அளித்திருக்கிறேன். அது ஆண் சிறுத்தை; இந்த அவையின் உறுப்பினரான எம். ஜி. இராமச்சந்திரனும் ஒரு சிறுத்தை அளித்திருக்கிறார் ; அது பெண் சிறுத்தை; அந்த இரண்டு சிறுத்தைகளும் காதலித்து, குட்டிகளையும் ஈன்றெடுத்துள்ளன. அந்த இரண்டும் இப்போது ஒன்றையொன்று சந்திக்கமுடியாமல் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றனர் ; அதனால் அவை மனமொடிந்திருக்கின்றன.

" அது ஒருபுறமிருக்க, அப்போது நடந்த ஊர்வலத்தில், என்னுடைய ஆண் சிறுத்தையை விட்டுவிட்டு, எம். ஜி. இராமச்சந்திரனின் பெண்சிறுத்தையை மட்டும் கொண்டு வந்தது

அறந்தாங்கியில் வேளாண்மைக் கிடங்குத் திறப்புவிழா

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் கட்டியுள்ள வேளாண்மைக் கிடங்கை, 3—4—68 மாலை 3-மணிக்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் திறந்துவைப்பார் ; இவ்விழாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் பி.இ. தலைமைவகிப்பார் ; அதுபோது அமைச்சருக்கு, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

குழுக் கூட்டங்கள்

தர்மபுரி வட்டம்

தர்மபுரி வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 3—4—68 பிற்பகல் 1-30 மணிக்கு பாப்பாரப்பட்டி கஸ்தூரி திரை அரங்கில் நடைபெறும் ; பொது உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு செயலாளர் பி. எஸ். முருகேசன் கேட்டுக்கொள்கிறார்.

திருச்சி

" திருச்சி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 3—4—68 இரவு 10-மணிக்கு மேல் அரண்சாலை தமிழ்ச் சங்கக் கட்டிட மாடியில் நடைபெறும் ; உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ள வேண்டுகிறேன் " என, செயலாளர் அ நடராசன் கேட்டுக்கொள்கிறார்.

காதில் விழுந்தது!

[அரைகுறை காங்கிரசுக்காரர் இருவர் அறைக்குள் பேசிக்கொண்டது.]

" நம்ம தலைவர், எங்கே இப்படிப் பறக்கிறார் ?"

" ஆமாம் ; பறக்கிறார் ! காலையில்தான் தர்மபுரி சுற்றுப் பயணத்தைக்கூட ரத்து செய்துவிட்டு வந்தார் ; உடனே, புதுடில்லிக்குப் போயிருக்கிறார்— விமானத்தில் !"

" அதெல்லாம் தெரிந்ததால்தானே கேட்டேன்; அங்கே—டில்லியில்—என்ன விசேடமாம் ?"

" அறுபது பேர் சேர்ந்து கேட்டிருக்கிறார்களாம்— 'காரியக் கமிட்டியைக் கூட்டுங்கள்' என்று !"

" ஏன் ?"

" 'கட்சியின் போக்கு அதிருப்தியளிக்கிறது ; தலைமையில் நம்பிக்கை இல்லை ; சில மாநிலப் பிரச்சினைகளைச் சமாளித்தது சரியில்லை' என்று பல காரணங்களைக் காட்டியிருக்கிறார்கள்."

" கூட்டத்தைக் கூட்ட முயற்சி செய்துகொண்டிருப்பவர் யார் யார் ?"

" வகைக்குச் சிலராக இருக்கிறார்கள் ; மக்களவை உறுப்பினர்கள்—அமைச்சர்கள்—இரண்டு பதவியும் இல்லாதவர்கள்—எல்லாரும்தான் !"

" அது சரி ; காரணகர்த்தா யார் ?"

" மிஸ்ரா என்பவர் !"

" மிஸ்ராவையா தெரியாது ? 'மிஸ்ரா என்பவர்' என்று சொல்லுகிறாய் ; இந்திரா அம்மையாருக்கு வேண்டியவராயிற்றே அவர் ! நிஜலிங்கப்பாவைத் தேர்ந்தெடுத்ததே இந்திராதான் ! இந்திராவுக்கு வேண்டிய மிஸ்ரா ஏன் இப்படி ஒரு முயற்சி செய்திருக்கிறார் ?"

" அதில்தானே சிறப்பே இருக்கிறது ! செய்தியாளர்களும் அதைத்தானே கேட்டிருக்கிறார்கள் ; 'என்ன ; இந்திரா உங்களை இப்படி இரண்டுங்கெட்டானாக்கிவிட்டாரே' என்ற கருத்துத்தொனிக்க அல்லவா நிஜ[illegible]பாவைக் கேட்டிருக்கிறார்கள் ?"

" மைசூரில் நல்லபடியாக இருந்தவரை, புதுடில்லிக்கு அழைத்தார்கள் ; ஆனால், அனைத்திந்தியத் தலைமையிலும் அமைதியான துவக்கமில்லை !"

" மனிதர் சமர்த்தர் ; அதனால்தான், இன்னும், முதலமைச்சர் பதவியையும் உதறவில்லை !"

" போகட்டும் ; காமராசருக்கு இந்தப் பிரச்சினையில் எவ்வளவு அக்கறை பார்த்தாயா ? அவசர அவசரமாகப் பறந்திருக்கிறாரே—புதுடில்லிக்கு !"

" இருக்காதா ? இப்போதுதானே சொன்னார்—'சனநாயகத்தை வாழவைக்கத்தான் காங்கிரசு முயற்சி செய்கிறது ; கழக ஆட்சியைக் கவிழ்க்க அல்ல' என்று ! சனநாயகத்தை வாழவைப்பதற்குள், காங்கிரசே செத்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா ? அதனால்தான் இத்தனை அவசரம் !"

—எஸ். ஆர்.

சென்னையில்

மத்திய அரசுப் போலீசு-- கமிஷனர் தரும் விளக்கம்

சென்னை, ஏப் 1 —

சென்னையில் மத்திய போலீசு நிறுத்தப்பட்டிருப்பது குறித்து பத்திரிகைகளில் வந்துள்ள செய்திக்கு போலீசு கமிஷனர் திரு. குப்புசாமி அவர்கள் அளித்துள்ள விவரம் வருமாறு :—

" சென்னையில் மத்தியப் போலீசு வரவழைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால், அது, மத்திய அரசால் நாங்கள் அறியாது அனுப்பப்பட்டதல்ல,

எந்த மாநிலமும் தேவைப்பட்டால், மத்திய அரசிடமிருந்து இந்தப் படையை வரவழைத்துக்கொள்ளலாம்.

சில மாதங்களுக்கு முன்பு கேரள அரசு மத்திய அரசிடமிருந்து சில போலீசு அணிகளை வரவழைத்திருந்தது ; சில மாதங்களுக்கு முன் நமக்குத் தேவைப்பட்டதால், அந்தப் படை கேரளத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, கோயமுத்தூருக்கு மாநில அரசால் அனுப்பப்பட்டது.

இப்போது சென்னைக்குத் தேவைப்பட்டதால், கோவையிலிருந்து சென்னைக்கு தற்காலிகமாக அதை வரவழைத்தோம்.

நம்மைக் கேட்காமலேயே மத்திய அரசு தானாகவே சென்னைக்கு மத்தியப் போலீசுப் படை அனுப்பியதாகச் சொல்லப்படுவதும் கருதப்படுவதும் தவறானதாகும்.

'நமக்குத் தேவைப்படுகிறது எனக் கோரியதால், அந்தப் போலீசுப்படை சென்னைக்கு அழைக்கப்பட்டிருக்கிறது' நமது தேவை முடிந்ததும் இது திருப்பி அனுப்பப்படும்.

மத்திய அரசாங்கம் தனக்குத் தேவைப்பட்டால் இதேபோன்று மாநில அரசின் போலிசையும் வரவழைத்துக்கொள்வது வழக்கம்."

நியாயமா ?" (சிரிப்பு)

அமைச்சர் ,ஏ. கோவிந்தசாமி :—" திரு. விநாயகம், ஆண் சிறுத்தை ஒன்றைக் கொடுத்தார் என்பது உண்மை ; ஆனால் அது, நடமாடக்கூடச் சக்தியற்ற நிலையில் வயதாகி, படுத்தபடி கிடக்கிறது." (சிரிப்பு)

கே. விநாயகம் :—" என்னுடைய சிறுத்தைக்கு ஒன்றும் அவ்வளவு வயதாகவில்லை ; அது நன்றாகத்தான் இருக்கிறது ; எம். ஜி. ஆர். அவர்களின் பெண் சிறுத்தைதான் 50—60 வயதாகி; படுத்திருக்கிறது."

அண்ணா :—" இந்த விஷயத்தைப் பற்றி இரண்டு சம்பந்திகளும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்." (பலத்த சிரிப்பு)

கலை நிகழ்ச்சி

பொன்னேரி தி. மு. க. சார்பில், 3—4—68 மாலை 7-மணிக்கு அரிகரன் பசார் தெருவில், திரு. எம். கே. சாமிநாதன் தலைமையிலும்—மு. கேசவன் முன்னிலையிலும், குமாரி விஜயா குழுவினரின் 'ஆளுகின்றார் அண்ணா' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

மாற்றியமைக்கும் யோசனை பரிசீலனையில் இல்லையாம்

புதுடில்லி, மார்ச் 30—

" மத்திய அரசு பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக தற்போது பின்பற்றப்படும் முறையில் மாறுதல் இராது ; மாற்றியமைக்கும் யோசனையும் அரசு பரிசீலனையில் இல்லை "

என்று, மக்களவையில், உள்துறை துணையமைச்சர் வி. சி. சுக்லா, கழக உறுப்பினர் முரசொலி மாறன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

வருகிற ஆண்டில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

" கலைக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில்தான் பெண்களைச் சேர்க்கக் கூடாது என்ற கொள்கையைத் துணைவேந்தரும் வற்புறுத்தி வருகிறார். பி.எஸ் சி. போன்ற பட்டப் படிப்புகளில் சேருவதில் தடையிருக்காது."

அறந்தாங்கி ஒன்றியப் பகுதியில்

அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

நிகழ்ச்சிகள்

3—4—68 காலை 9 மணி : அறந்தாங்கி பேரூராட்சி வரவேற்பும் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழாவும் ; 10 மணி : எருக்கலக்கோட்டை பள்ளிக் கட்டிடத் திறப்புவிழாவும், ஊராட்சி வரவேற்பும் ; 10-30 மணி : மாங்குடி ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடத் திறப்புவிழாவும், ஊராட்சி வரவேற்பும் ; 11 மணி : அரசர்குளம் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவும், பேரூராட்சிமன்ற வரவேற்பும் ; மாலை 3 மணி : அறந்தாங்கி வேளாண்மைக் கிடங்குத் திறப்புவிழாவும், ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் ; இரவு 7 மணி : அறந்தாங்கி பொது மக்கள் வரவேற்பும் பட்டா வழங்குதலும்.

எம். ஆர். வெங்கட்ராமன் நன்றியறிவிப்பு

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) தமிழ் மாநிலக் குழுவின் செயலாளர் திரு. எம். ஆர். வெங்கட்ராமன் அறிவிப்பதாவது :—

" நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில், தி. மு. க. ஆதரவுபெற்ற வேட்பாளராக என்னை ஏற்று, வெற்றியை உறுதிப்படுத்தி உதவிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், ஆதரவு நல்கிய இதர நேசக் கட்சியினருக்கும், நண்பர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) தமிழ் மாநிலக் குழுவின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு

(மாநில வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்தது)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 21/67—68

வேலை : சேரி ஒழிப்பு - சீரமைப்புத் திட்டம்—பீச்சாங்குளம் - திருச்சி-XII முதல் XXI வரையிலுள்ள தொகுதிகளின்கீழ் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கும், பிரித்துப் பார்ப்பதற்குமான கடைசி நாள் 17—4—1968-க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத் தொடர்பான அறிக்கைகளை 16—4—1968 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். வெங்கடாச்சார்,
நிர்வாகப் பொறியர் &
நிர்வாக அதிகாரி

சர்க்யூட் அவுஸ் ரோடு, திருச்சி-1

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. No. ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.